செ.வெ.எண்.25 நாள்: 14.10.2019

**அரியலூர் மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் நேரில் ஆய்வு.**

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி, கொல்லாபுரம் கிராமத்தில் ஊராட்சி மற்றும் சுகாதாரத்துறையின் சார்பில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் இன்று (14.10.2019) நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

**இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மாவட்டம் முழுவதும் நடைபெற்று வருகிறது.

மேலும், அரசு மருத்துவமனைகளுக்கு காய்ச்சலுடன் வரும் நோயாளிகளின் முகவரிகள் சேகரிக்கப்பட்டு, அவர்களின் வீடு மற்றும் சுற்றுப்புறங்களை கண்காணித்திட பொது சுகாதாரத்துறையுடன் நகராட்சி மற்றும் ஊராட்சி துறை பணியாளர்கள் டெங்கு காய்ச்சல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனைத்தொடர்ந்து, பொது சுகாதாரத்துறை மற்றும் நகராட்சி பணியாளர்களுடன் வீடு, வீடாகச் சென்று வீடுகளில் கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து, கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளுதல் மற்றும் சிமெண்ட் தொட்டி, தண்ணீர் தொட்டி, உரல், பாத்திரங்கள் போன்றவைகளில் டெங்கு கொசுப்புழு உற்பத்தியாகுவதை தடுத்து, அழித்தல் போன்ற பணிகள் மேற்கொண்டு வருகின்றனர். மேற்காணும் இடங்களில் நீர் தேங்கி கொசுப்புழு உற்பத்தி காணப்படும் பகுதிகளில் அபராதத் தொகை வசூலிக்கப்படும்.

இதன் ஒரு பகுதியாக அரியலூர் ஊராட்சிக்குட்பட்ட கொல்லாபுரம் கிராமத்தில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகள் மற்றும் தூய்மையான குடிநீர் வழங்கப்படுவதையும் ஆய்வு செய்யப்பட்டது. மேலும், ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் உள்ள காய்ச்சல் பிரிவில் உள்ள உள்நோயாளிகளை பார்வையிட்டு அவர்களுக்கு அளிக்கப்படும் மருத்துவ பரிசோதனைகள் குறித்து கேட்டறியப்பட்டு அவர்களுக்கு தகுந்த சிகிச்சை வழங்க மருத்துவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், காய்ச்சல் பாதிக்கப்பட்ட பகுதி மற்றும் இதர பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் நிலவேம்பு காசாயம், உப்புக்கரைசல் ஆகியவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, மழைகாலங்களில் பொதுமக்கள் குடிநீரை காய்ச்சி வைடிகட்டி பருக வேண்டும். தங்களுடைய வீடு மற்றும் சுற்றுப்புறங்களை சுத்தமாகவும், தூய்மையாகவும் பராமரித்திட வேண்டும். டெங்கு கொசு ஒழிப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகளுக்கு பொதுமக்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு அளித்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து, காவனூர் கிராமத்தில் உள்ள புது ஏரி மற்றும் அம்பாபூர் கிராமத்தில் உள்ள செங்கட்டையான் ஏரிகளில் முதலமைச்சரின் குடிமராமத்துத் திட்டப்பணிகளின் கீழ் கரைகள் பலப்படுத்தும் பணி, தூர்வாரும் பணி, வரத்துவாய்க்கால்கள் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் எந்தவித ஆக்கிரமிப்புகள் இன்றியும், ஏரிகளில் முழுபரப்பளவை முறையாக ஆய்வு செய்து, பணிகள் மேற்கொள்ள வேண்டும். மேலும், இப்பணிகள் அனைத்தும் விரைந்து முடிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சித்திட்ட முகமை) சுந்தர்ராஜன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) வீ.சி.ஹேமசந்த் காந்தி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, அரியலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலையரசன், ஜாகீர் உசேன், சுகாதார பணியாளர்கள், ஊராட்சி பணியாளர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**